Linking up of Southern Rivers.

*148 *Q.*—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether it is a fact that the Government have submitted a Memorandum to the Irrigation and Power Commission to investigate the linking up of Southern Rivers : and

(*b*) if so, the details of the same ?

தென்னுட்டு நதிகளை இணைத்தல்.

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு பொதுப்பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தென்னுட்டு நதிகளை இணைப்பது பற்றி புலனுய்வு செய்யும்படி, பாசன-மின்சக்தி ஆணைக் குழுவிற்கு அரசு குறிப்பாணை ஒன்றை அனுப்பியுள்ளது என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) & (இ) காவிரியுடன் கங்கையை இணைப்பதற்கான தேசிய ஆறுகள் இணைப்புத் திட்டத்தின் ஒரு பாகமாக கோதாவரி காவிரி இணைப்புக் கால்வாய் திட்டம் பற்றிய புலனுய்வு, அதை நிறைவேற்றுதல் தொடர்பாக முன் நடவடிக்கைகள் எடுக்குமாறு, தமிழ்நாடு அரசு பாசன ஆணைக்குழுவிற்கு அளித்த தொடக்க நிலைக் குறிப்பில் கேட்டுள்ளது. ஆந்திர மாநிலத்தின் ஆறுகளான கோதாவரி, கிருஷ்ணு ஆகியவற்றின் உபரி நீரையும் கேரள மாநில ஆறுகளின் உபரி நீரையும் தமிழகத்தின் பயனுக்காகத் திருப்பி விடுவதற்கான வாய்ப்பு குறித்தும் கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Lower Nirar Dam.

*149. *Q.*—THIRU S. VELLAPANDIAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state the total amount of benefit derived by the phased programme for the utilisation of the irrigation potential of the lower Nirar Dam ?

கீழ் நீராறு அணை.

திரு. எஸ். வெள்ளப்பாண்டியன் : மாண்புமிகு பொதுப் பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

கீழ் நீராறு பாசன வளத்தைப் பயன்படுத்திக் கொள்வதற்கான படிப்படியான திட்டத்தால் கிட்டிய மொத்தப் பயன் எவ்வளவு ?